**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 20.01.2026**
**OS. No. 80/2020**
**வழக்கு சாட்சி PW.2–தங்கமணி, த/பெ.பொன்னுசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

6) நான் கருப்பூர் வெள்ளாளப்பட்டியை அடுத்து சேலம் மாவட்டத்திலுள்ள சிவதாபுரத்தில் வேலை பார்த்தேன். தாவா சொத்தானது ஆரம்பத்தில் காளியப்பன் என்பவரது அனுபவத்தில் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1968 ல் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்று குடி வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்று வகைபாடு செய்யப்பட்டு அதற்குண்டான அடங்கலும் உள்ளது என்றால் சரிதான். 1968 ல் தாவா சொத்தின் அடங்களாது காளியப்பன் பெயரில் இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை.

7) அதன் பிறகு 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் பழனியப்பன் கிரையம் பெற்ற பிறகு அவர்களது பெயரில் அடங்கல் மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. சாந்தப்ப செட்டியார் அனுபவத்தில் தான் தாவா சொத்தானது இருந்தது என்பதற்கு அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். சாந்தப்ப செட்டியார் என்பவர் தாவா சொத்தோ அல்லது அதன் பகுதிகளில் அனுபவத்திலோ இருந்ததில்லை என்றால் சரியல்ல. என் மகன் தம்பிதுரை பவானியில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. இரட்டை கொலை வழக்கில் அவரும் ஒரு குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தார் என்றால் சரியல்ல. 2009ம் வருடம் அந்த வழக்கில் அவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது அந்த வழக்கில் மேல்முறையீடு செய்து பிணையில் உள்ளார் என்றால் சரியல்ல.

8) என்னுடைய மற்றொரு மகன் கார்த்திக் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான், இரண்டு மாதங்களுக்கு முன்பு விபத்தில் இறந்துவிட்டார். நானும், என் மனைவி

மற்றும் மகன்கள் அனைவரும் சேர்ந்து என் மகன்களுக்கு குடியிருக்க இடம் தருமாறு கூறி, 1ம் பிரதிவாதிக்கு அவ்வப்போது தொந்தரவு கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இருந்ததாக சொல்லப்படும் இரண்டு சாலை வீடுகள் யார் பெயரில் இருந்தது, அதற்கு வரி யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது ஆகியவை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, என் மனைவி பெயரில் தான் வழங்கப்பட்டது, அதற்கான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். அந்த கூரை வீட்டிற்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான், 10 வருடங்களுக்கு முன்பு அதை இடித்துவிட்டு, மெத்தை வீடு கட்டி மின் இணைப்பு பெற்றுவிட்டோம்.

9) இன்றைய தினம் வரை நான் ஆரோக்கியமாகத்தான் உள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி எனக்கு உடல்நிலை மிகவும் ஆபத்தான நிலையில் இருந்ததாக சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு அவ்வாறு இருந்தேன், தற்போது சரியாகிவிட்டது. என் நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டதால், என் அக்காவான 1ம் பிரதிவாதி சரசு என்பவரை தாவா சொத்தில் விவசாயம் செய்து, அனுபவத்தில் இருக்குமாறு சொன்னதாக சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான், அது பொய்தான். என் மனைவி தாக்கல் செய்த பிராதில் மேற்கண்ட விவரத்தை சொல்லியுள்ளார்களா என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

10) 1ம் பிரதிவாதி இரண்டு மாடுகள் வைத்திருந்தார், வழக்கு தாக்கல் செய்த பிறகு அதை விற்றுவிட்டார். 1ம் பிரதிவாதி தற்போதும் தாவா சொத்தில் இரண்டு மாடுகள் வளர்த்து பால் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எந்த தேதியில் ஊர் பெரியவர்களை வைத்து பஞ்சாயத்து செய்தோம் என்றால் 03.07.2020ல் பஞ்சாயத்து செய்தோம். 02.07.2020ல் 1ம் பிரதிவாதி சரசு (எ) சரஸ்வதி என் பெயரில் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு நினைவில்லை. அதற்கு மறுநாள் காவல் துறையினர் என்னை வந்து விசாரித்தார்கள் என்றும், அதை தான் நான் சமாதானம் பேசியதாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

11) பிரதிவாதிகள் என்ன விலைக்கு நிலம் கேட்டார்கள் என்றால் நிலம் கொடுத்துவிடுமாறு மட்டும் தான்கேட்டார்கள். தாவா சொத்தானது பிரதிவாதிகளுடையது என்றும், பரிதாபத்தின் அடிப்படையில் எங்களை அதில் தங்க வைத்துள்ளார்கள் என்றும், அவர்களதுசொத்தை அவர்களே விலைக்கு கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் மற்றும் நானும் மீண்டும் மீண்டும் என் மகனுக்கு வீடு கட்ட நிலம் கொடுக்குமாறு 1ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. கோவியட் ஊர் அடங்கின் போது தாவா சொத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தார் என்றும், என்னுடைய தூண்டுதலின் பேரில் என் மனைவி மற்றும் மகன்கள் அவரை அடித்து துண்புறுத்தினார்கள் என்றும், அதன் பேரில் கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றும், காவல் துறையினரும் என்னை எச்சரித்தார்கள் என்றால் சரியல்ல. அந்த குற்ற வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி தான் என் மனைவியை வைத்து இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12) தாவா சொத்தில் நாங்கள் குடும்பத்துடன் அனுபவத்திலுள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றும், 1ம் பிரதிவாதி பரிதாபத்தில் கொடுத்த நிலத்தில் நாங்கள் குடியிருந்து கொண்டு அவருக்கு எதிராக பொய்யாக சங்கதிகளை சொல்லி என் மனைவியை வைத்து வழக்கு தாக்கல் செய்து விட்டு அதற்கு பொய்யாக நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என் மனைவி தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.